**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.179/மா/2024
நாள் 19 .08.2025

திரு. R. காதர், முறையீட்டு மனுதாரர்
வேலூர்.

ஆணையர், எதிர் மனுதாரர்
வேலூர் மாநகராட்சி.

வேலூர்–1, இக்ரா பள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, கதவு எண் 18/A1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. காதர் என்பவரின் 12.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.09.2024 அன்று பெறப்பட்டு 179/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர்–1, இக்ரா பள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, கதவு எண் 18/A1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. காதர் என்பவர் 12.09.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ல் பொறியாளர் திரு.செல்வராஜ் அவர்களிடம் பலமுறை கால்வாய் முறைகேடு பற்றி தகவல் தெரியபடுத்தியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

கல்வெட்டுக்கள் (Small Bridge) நெம்பர் 4 அமைக்கப்பட்டது. ஆனால் 10க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் (Small Bridge) அமைக்கவில்லை.

250000 x 10 = 2500000 இருபத்து ஐந்து லட்சம் ஊழல் முறைகேடுகளில்

வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ல் கஸ்பா பகுதியில் வார்டு 40ல் எம்.சி ரோட்டில் ஒரு கிலோ மீட்டர் அளவுக்கு சாலைக்கு இருபுறமும், ஒரு மாதத்திற்கு முன்பு புதிய கால்வாய் அமைக்கப்பட்டது. இதில் கால்வாய் மேல் அமைக்கப்படும் கல்வெட்டுக்கள் (Small Bridge) அமைக்காமல் புதிய கால்வாய் கட்டப்பட்டது. அதில் கால்வாய் நீர் மேலிருந்து கீழ் செல்லும்படியாக கால்வாய் அமைக்காததால் கால்வாயில் நீர் செல்லவில்லை. கால்வாய் உள்ளே பூசுவேலை செய்யாததால் கால்வாய் நீர் செல்லவில்லை. புதிய கால்வாய் அமைக்கவும் கல்வெட்டு அமைக்கவும், ஆய்வு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

இங்கு கால்வாய் அமைக்கபட்டதில் பழைய கல்வெட்டுக்கள் (Small Bridge) இடித்து கட்டாமல் பழைய கல்வெட்டு சேர்த்து புதிய கால்வாய் கட்டப்பட்டதால் கால்வாய் நீர்

செல்லாமல் அதில் கொசு துர்நாற்றம் நோய்கள் பரவுகிறது. கால்வாய் நீர் செல்லுவதற்காக அமைக்கப்படும் திட்டமே வீணாகிறது. பொது மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது.

அதில் கால்வாய் நீர் மேலிருந்து கீழ் செல்லும்படியாக கால்வாய் அமைக்காததால் கால்வாய் நீர் செல்லவில்லை. கால்வாய் உள்ளே பூசு வேலை செய்யாததால் கால்வாய் நீர் செல்லவில்லை. புதிய கால்வாய் அமைக்கவும், கல்வெட்டு அமைக்கவும், ஆய்வு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

கோரிக்கை

1. தரமான புதிய கால்வாய் அமைக்கவும்
2. கல்வெட்டுகள் அமைக்கவும் (Small Bridge)
3. கால்வாய் நீர் செல்லும்படி கால்வாய் அமைத்து அதற்குள் பூசுவேலை செய்ய
4. ஆய்வு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.
5. ஆய்வு செய்ய குழு அமைத்து வேலூர் மாநகராட்சியில் அமைத்த அனைத்து புதிய கால்வாய் ஆய்வு செய்து அதிகாரிகள் மீது நடவடிக்கை

ஆகவே, வேலூர் மாநகராட்சியில் புதிய கால்வாய் அமைத்ததில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து ஊழல் முறைகேடுகளை ஒழிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவம் 08.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் ஆணையரிடமிருந்து பெறப்படவில்லை.

3. வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர் மனுதாரருக்கு முகவரியிட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிட்ட கடித ந.க. எண் 2914/2024/இ1/மஅ4, நாள் 04.07.2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"1. பொறியாளர் திரு. செல்வராஜ் அவர்கள் இராணிப்பேட்டை நகராட்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

2. வார்டு 40ல் M C ரோட்டில் 4 எண்ணிக்கை மட்டுமே புதிய சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது.

3. வார்டு 40ல் M C ரோட்டில் புதிய கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முற்றிலும் பழுதடைந்த சிறுபாலங்கள் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைக்கப்பட்டுள்ளது. நல்ல நிலையில் உள்ள சிறுபாலங்கள் இடித்து புதியதாக சிறுபாலங்கள் கட்டப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

4. மேற்கண்ட கல்வெட்டுகள் கழிவுநீர் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. வாட்டர் கிரேடியன்ட் படி கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

5. மேற்கண்ட கல்வெட்டுகள் கழிவுநீர் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. வாட்டர் கிரேடியன்ட்படி கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கால்வாய் கீழ்புறம் பூசுவேலை செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

6. 1. தரமான கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.
   2. 4 எண்ணிக்கை கல்வெட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது.
   3. கால்வாய் நீர் செல்லும்படி கால்வாய் அமைத்து அதற்கு பூசுவேலை செய்யப்பட்டுள்ளது.

4. பணியின் குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்

7. பணியின் குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"(1) கல்வெட்டுக்கள் (Small Bridge) நெம்பர் 4 அமைக்கப்பட்டது. ஆனால் 10க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் (Small Bridge) அமைக்கவில்லை. இது குறித்து வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ல் பொறியாளர் திரு.ஆல்பர்ட் அமல்தாஸ் அவர்களிடம் பலமுறை கால்வாய் முறைகேடு பற்றி தகவல் தெரியபடுத்தியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

(2) வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ல் கஸ்பா பகுதியில் வார்டு 40ல் எம்.சி ரோட்டில் ஒரு கிலோ மீட்டர் அளவுக்கு சாலைக்கு இருபுறமும், ஒரு மாதத்திற்கு முன்பு புதிய கால்வாய் அமைக்கப்பட்டது. இதில் கால்வாய் மேல் அமைக்கப்படும் கல்வெட்டுக்கள் (Small Bridge) அமைக்காமல் புதிய கால்வாய் கட்டப்பட்டது. அதில் கால்வாய் நீர் மேலிருந்து கீழ் செல்லும்படியாக கால்வாய் அமைக்காததால் கால்வாய் நீர் செல்லவில்லை. புதிய கால்வாய் அமைக்கவும் கல்வெட்டு அமைக்கவும், ஆய்வு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

(3) இங்கு கால்வாய் அமைக்கபட்டதில் பழைய கல்வெட்டுக்கள் (Small Bridge) இடித்து கட்டாமல் பழைய கல்வெட்டு சேர்த்து புதிய கால்வாய் கட்டப்பட்டதால் கால்வாய் நீர் முறையாக செல்லாமல் இத்திட்டமே வீணாகி, பொது மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

(4) கால்வாய் நீர் மேலிருந்து கீழ் நோக்கி செல்லும்படியாக கால்வாய் அமைக்காததால் கால்வாயில் நீர் முறையாக செல்லாமல் தேங்கியுள்ளது. மேலும், கால்வாயில் பூச்சு வேலை செய்யப்படவில்லை.

ஆகவே வேலூர் மாநகராட்சியில் புதிய கால்வாய் அமைத்ததில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஒரு குழு அமைத்து அக்குழுவில் என்னையும் ஒரு உறுப்பினராக சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும், தரமான புதிய கால்வாய் அமைக்கவும், கல்வெட்டுக்கள் அமைக்கவும் (Small Bridge), கால்வாய் நீர் செல்லும்படி கால்வாய் அமைத்து அதற்கு பூசு வேலை செய்வதற்கும், இப்பணிகளை நிறைவேற்றிட காலகெடு நிர்ணயம் செய்யவும், வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ன் இளநிலை பொறியாளர் 09.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"(1) வார்டு 40ல் M C ரோட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முற்றிலும் பழுதடைந்த சிறுபாலங்கள் மட்டும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக

சிறுபாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல நிலையில் உள்ள சிறுபாலங்கள் இடிக்கப்படவில்லை.

(2) வார்டு 40–ல் M C ரோட்டில் 10 சிறுபாலங்களில் 4 பழுதடைந்த பாலங்கள் மட்டுமே இடிக்கப்பட்டு, புதிய சிறுபாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற 6 சிறுபாலங்கள் நல்ல நிலையில் உள்ளன.

(3) மேற்கண்ட மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டதில் உள்ள கல்வெட்டுகள் மழைநீர் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. Water Gradient–படி மேற்கண்ட கால்வாய் அமைக்கப்பட்டு, மழைநீர் சீராக செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(4) மேற்கண்ட இடித்து கட்டப்பட்ட 4 சிறுபாலங்கள் முழுமையாக பூச்சு வேலை செய்யப்பட்டுள்ளன.

(5) மனுதாரர் குறிப்பிட்ட மழைநீர் வடிகால் கால்வாய் செல்லும் கல்வெட்டுகளில் சேர்ந்துள்ள மண் கழிவுகள் குறித்து கள ஆய்வு செய்து மண் கழிவுகள் இருப்பின் அவற்றை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி ஆணையாளர், மனுதாரருக்கு முகவரியிட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்ட கடிதம் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், தனது மனு மற்றும் வாக்குமூலத்தில், வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு 40–ல் கஸ்பா பகுதியில் எம்.சி ரோட்டில் ஒரு கிலோ மீட்டர் அளவுக்கு சாலைக்கு இருபுறமும், ஒரு மாதத்திற்கு முன்பு அமைக்கப்பட்ட புதிய கால்வாய்களில் மேல் கல்வெட்டுக்கள் அமைக்காமல் கட்டப்பட்டுள்ளன எனவும், புதிய கால்வாய் அமைக்கப்பட்டதில், பழைய கல்வெட்டுக்கள் (Small Bridge) இடித்து கட்டாமல், அதனை சேர்த்து கட்டப்பட்டதாலும், அதில் கால்வாய் நீர் மேலிருந்து கீழ் நோக்கி செல்லும்படியாக கால்வாய் அமைக்காததலால் கால்வாய் நீர் முறையாக செல்லாமல் கால்வாயில் நீர் தேங்கியுள்ளதாகவும், கால்வாயில் பூச்சு வேலை செய்யப்படவில்லை எனவும், ஆகவே மேற்கண்ட புதிய கால்வாய் அமைத்ததில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், இது குறித்து ஒரு குழு அமைத்து அக்குழுவில் தன்னையும் ஒரு உறுப்பினராக சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும், தரமான புதிய கால்வாய் அமைக்கவும், கல்வெட்டுக்கள் அமைக்கவும் (Small Bridge), கால்வாய் நீர் செல்லும்படி கால்வாய் அமைத்து அதற்கு பூசு வேலை செய்வதற்கும், இப்பணிகளை நிறைவேற்றிட காலகெடு நிர்ணயம் செய்யவும், வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.

வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு 40–ல் கஸ்பா பகுதியில் எம்.சி ரோட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு, அதில் உள்ள 10 சிறுபாலங்களில் முற்றிலும் பழுதடைந்த 4 (நான்கு) பாலங்கள் மட்டுமே இடிக்கப்பட்டு, புதிய சிறுபாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், மற்ற 6 சிறுபாலங்கள் நல்ல நிலையில் உள்ளன எனவும், நல்ல நிலையில் உள்ள சிறுபாலங்கள் இடிக்கப்படவில்லை எனவும், மேற்கண்ட மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டதில் உள்ள கல்வெட்டுகள் மழைநீர் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும், Water Gradient–படி மேற்கண்ட கால்வாய் அமைக்கப்பட்டு, மழைநீர் சீராக செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட

இடித்து கட்டப்பட்ட 4 சிறுபாலங்கள் முழுமையாக பூச்சு வேலை செய்யப்பட்டுள்ளன எனவும், மனுதாரர் குறிப்பிட்ட மழைநீர் வடிகால் கால்வாய் செல்லும் கல்வெட்டுகளில் சேர்ந்துள்ள மண் கழிவுகள் குறித்து கள ஆய்வு செய்து மண் கழிவுகள் இருப்பின் அவற்றை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருப்பது வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர், மனுதாரருக்கு முகவரியிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்ட கடிதம் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு 40–ல் கஸ்பா பகுதியில் எம்.சி ரோட்டில் அமைக்கப்பட்ட புதிய கால்வாய்களின் பணிகளில் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மனுதாரர் குறிப்பிட்ட மழைநீர் வடிகால் கால்வாய் செல்லும் கல்வெட்டுகளில் சேர்ந்துள்ள மண் கழிவுகள் குறித்து கள ஆய்வு செய்து மண் கழிவுகள் இருப்பின் அவற்றை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இருப்பினும் மேற்சொன்ன பணிகளை கள ஆய்வு செய்வதற்கு அண்ணா பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் பொறியியல் பேராசிரியர் உள்ளடக்கிய ஒரு குழு அமைத்து, அக்குழுவின் அறிக்கை பெற்று, அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையருக்கு உத்தரவிடுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும், இம்முறை மன்ற நடுவம் 08.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டும், 9 மாதங்கள் கடந்தும், இம்முறைமன்றத்திற்கு அறிக்கை ஏதும் சமர்ப்பிக்காமலும், விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்ட போதும், இம்முறை மன்றத்திற்கான அறிக்கை ஏதும் சமர்ப்பிக்காமலும், மனுதாரருக்கு முகவரியிட்டு அதன் நகல் கடிதத்தினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிய வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. காதர்,
கதவு எண் 18/A1 சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு,
இக்ரா பள்ளி அருகில்,
வேலூர்–1.

(2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

(3) உதவி ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி
மண்டலம் 4,
வேலூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், செ
சன்னை 600 0028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ,கோ / உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

21/8/25
செயலாளர்.